EJCTS
www.ejcts.mayas.info

Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 24

# காலகண்டம் புதினத்தில் பொற்கொல்லரின் தொழில் சார் பண்பாடு இனவரைவியல் கோட்பாட்டின் அடிப்படையில்

**இரா.சூர்யா**
உதவிப்பேராசிரியர்
ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்
*மின்னஞ்சல்: suryapakalavan@gmail.com*

## ஆய்வுச்சுருக்கம்

சமுதாயப் பண்பாட்டு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். ‘இனக்குழுவியல்’ என்னும் பொருளுடைய Ethonos, Graphic ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. Ethonos என்பதற்கு எழுதுவது அல்லது வரைதல் என்பது பொருள். ஆகவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. அந்த வகையில், பொற்கொல்லர் பற்றிய காலகண்டம் நாவலும் ஓர் இனக்குழுவின் வாழ்வியலை குறிப்பிடுவதாக அமைந்த நாவல் ஆகும். பொற்கொல்லரின் இடப்பெயர்வு முதல் இடவரவு, வாழ்வியல் முறை, வாழ்வியல் கூறுகள், தொழில், சமூக நிலை, வாழ்வியல் மற்றும் தொழில் ஆகியவற்றில் உள்ள பிரச்சனைகள், சிக்கல்கள், பண்பாடு, பழக்கவழக்கம், சடங்குகள் என்று பொற்கொல்லர் சமூகம் குறித்த பல தகவல்களை நாவல் பதிவு செய்கின்றது. நாவல் பதிவு செய்யும் பொற்கொல்லரின் தொழில் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை இக்கட்டுரை குறிப்பிடுகிறது. பொற்கொல்லரின் தொழில் சார்ந்து விளங்கும் பண்பாடு, கால

மாற்றத்தால் தொழிலில் ஏற்பட்ட மாற்றம் பண்பாட்டில் ஏற்படுத்திய தாக்கங்கள், தொழில் சார்ந்து விளங்கும் தெலுங்கு மொழி அந்த இனத்தின் பண்பாட்டு கூறாக விளங்கும் தன்மை குறித்தும் இக்கட்டுரை விவரிக்கிறது.

## முக்கிய வார்த்தைகள்

பொற்கொல்லர்,காலகண்டம்,இனவரைவு,சாதி,குழு,தொழில்,அடையாளம், கைவினைஞர்கள்,திருப்பூட்டு,தாலி,ஆசாரி,தெலுங்கு,செட்டியார்

## முன்னுரை

தமிழ்ச்சமூகம் என்பது சாத்திய கட்டமைப்பால் வேரூன்றிய சமூகம். இங்கு சாதியின் மையமாகத் தொழிலும் அந்தச் சாதி சார்ந்த சில பண்பாட்டுக் கூறுகளும் தனித்து நிற்கின்றன. ஒரு தொழிலினை மேற்கொள்ளும் ஒரு குழுவோ அல்லது ஒருக் குறிப்பிட்ட சமூகத்தினரோ தங்களுக்கு உள்ளாக மட்டும் தொடர்பு படுத்திக்கொள்ள ஒரு சில குறியீடுகளையோ அல்லது தங்களுக்கான வேற்று மொழி அல்லது சொல்லாடல்களையோ பயன்படுத்துவது உண்டு. அந்த வகையில் பொற்கொல்லர் சமூகமானது தங்கள் தொழில் சார்ந்தும் தங்கள் வாழ்வியல் சார்ந்தும் மேற்கொள்ளும் சில கூறுகள் அச்சமூகத்தின் தனித்த அடையாளமாக விளங்குகின்றன. அத்தனித்த அடையாளம் அவர்களின் வாழ்வியலோடு கலந்த பண்பாட்டுச் சிறப்பினைக் கொண்டதாக விளங்குகின்றது.

## இனவரைவியல் - கோட்பாடு

ஒரு குழுவை இனவரைவியல் கோட்பாட்டின் வழி ஆய்வு செய்திடும் பொழுது ஆய்வுக்கான தரவாகளாக முப்பதுக்கும் மேற்பட்டவற்றை வகைபடுத்துகின்றது இனவரைவியல். புவிச்சூழல், சுற்றுச்சூழல், குடியிருப்புமுறை, திருமணமுறை, பொருள்சார் பண்பாடு என்று அவற்றை மேலும் வகைப்படுத்தலாம். இந்த வகைபாடுகளின் மூலம் ஒரு இனத்தின், குழுவின் தகவல்களை தரவுகளாக சேகரித்து இனவரைவியல் ஆய்வினை மேற்கொள்ளலாம். ஆனால் இலக்கியத்தில் இனவரைவு என்பது படைப்பாளியின் படைப்புகளின் வழி அப்படைப்பு தரும் தரவுகளின் அடிப்படையில் அமைவது.

இனவரைவியலை படைப்பாளியும் இனவரைவியலாளனும் ஒரே மாதிரிப் பயன்படுத்துவதில்லை. ஒரு படைப்பில் இனவரைவியல் எவ்வளவிற்கு இடம்பெருகின்றதோ அவ்வளவிற்கு அது எதார்த்தத் தன்மை பெறும் என்று கருதலாம். இனவரைவியல் பண்பாட்டை எதார்த்தமாக காட்சிப்படுத்துகின்றது. இலக்கியம் புனைவுகளுடன் காட்சிப்படுத்துகிறது.இவ்விரு காட்சிப்படுத்தல்களிலும் வாழ்வியல் கூறுகளே பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறாயின் இலக்கியப் பனுவல்களிலும் இனவரைவியல் கூறுகள் தவிர்க்க முடியாதவை என்பது வெளிப்படையானது.

## காலகண்டம் புதினத்தில் பொற்கொல்லரின் தொழில் சார் பண்பாடு இனவரைவியல் கோட்பாட்டின் அடிப்படையில்

"இலக்கியத்திற்கும் இனவரைவியலுக்கும் இடையேயான உறவு நிலை இலக்கியத்தின் வழியாக பண்பாட்டை அணுக இயலும் என்று கருதவைத்தது"[1] (இலக்கிய இனவரைவியல், ஸ்டீபன்.ஞா, பக்க எண் 5.) என்கிறார் ஞா.ஸ்டீபன்.

"இலக்கிய இனவரைவியல் என்பது இலக்கியத்தை மானுடவியல் அடிப்படையில் ஆய்வு செய்வதற்கான ஒரு முறையியல் ஆகும். பண்பாடு என்பது எண்ணற்ற கூறுகளால் இணைக்கப்பெற்ற ஒழுங்கமைப்பு ஆகும்."[2] (இலக்கிய இனவரைவியல், ஸ்டீபன்.ஞா, பக்க எண் 23) என்று குறிப்பிடுகிறார் ஞா.ஸ்டீபன்.

"மானிடவியல் மனிதனைப் பண்பாடு நிலையிலும் உயிரியல் நிலையிலும் படிக்கும் புலம் ஆகும். பண்பாட்டு நிலையில் மனிதனை அறிவது என்பது இலக்கியத்தோடு தொடர்புபடுத்தும் வாய்ப்புகளைப் பெற்ற பார்வையாகும். இனவரைவியல் என்பது மானுடவியலின் குறிப்பாகப் பண்பாட்டு மானிடவியலின் இன்றியமையாத பிரிவு ஆகும்."[3] (இலக்கிய இனவரைவியல், ஸ்டீபன்.ஞா, பக்க எண் 13) என்கிறார் ஞா.ஸ்டீபன்.

## காலகண்டம் புதினத்தில் இனவரைவியல்

"தமிழ் நாவல் இலக்கிய வரலாறானது ஒவ்வொரு காலத்திலும் பல புதிய திசை வழிகளில் பயணம் செய்து வருகிறது. நாவலின் கரு கதைமாந்தர், நாவலின் உருவம், மொழிநடை என ஒவ்வொன்றிலும் மாறுதல்கள் உருவாகியுள்ளன. இவ்வகையில் சென்ற நூற்றாண்டின் எழுபதுகளில் நீலபத்மநாபனின் 'தலைமுறைகள்' நாவலும் ராஜநாராயணின் 'கோபல்ல கிராமமும்' புதியதொரு போக்கை அறிமுகம் செய்தன.

ஒரு குறிப்பிட்ட சாதியினரின் வாழ்வை மையமாகக் கொண்டு எழுதும் இப்போக்கு இந்நாவல்களின் அறிமுகத்துக்குப்பின் வளரத் தொடங்கியது. வேணுகோபாலின் 'நுண்வெளிக் கிரணகள்' சி.எம்.முத்துவின் 'கறிச்சோறு' என்பன இவ்வரிசையில் இணைந்தன. சமூக நாவல்கள் என்ற பரந்த வகைமையில் இடம் பெற்றாலும், இவற்றின் தனித்துவ தன்மையின் அடிப்படையில் இனவரைவியல் நாவல்கள் என்று இந்நாவல்களை வகைமைப்படுத்தலாம். இவ்வரிசையில் அண்மையில் வெளியான செந்தில்குமாரின் 'காலகண்டம்' நாவலையும் இணைத்துக்கொள்ளலாம்"[4] (இனவரைவியலும் தமிழ் நாவல்களும், சிவசுபிரமனியன்.ஆ,பக்க எண் 4) என்ற நாவல்களில் இனவரைவியல் இடம்பெறும் பாங்கினை குறித்து ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். மேலும் எஸ்.செந்தில்குமாரின் காலகண்டம் நாவலை இனவரைவியல் வரிசையில் சுட்டுகின்றார்.

ஞா.ஸ்டீபன், ஆ.சிவசுப்பிரமணியன் ஆகியோரின் கருத்துக்களின் அடிப்படையிலும், இனவரைவியலாலர்களின் வரையறையின் அடிப்படையிலும்

காலகண்டம் நாவலில் பொற்கொல்லரின் தொழில் சார் பண்பாட்டை இனவரைவு கோட்பாட்டின் வழி முன்வைக்கப்படுகிறது.

## தொழில் சார் பண்பாடு

கைவினைஞர்களான பொற்கொல்லகளின் தொழில் சமூகத்தில் பண்பாட்டுடன் ஒன்றியதாகும். பொற்கொல்லர்கள் செய்திடும் கைவினைப் பொருட்களான ஆபரணங்களோ, உலோக சிலைகளோ எதுவாகினும் கலைநயமிக்கப் பண்பாட்டு அடையாளமாக விளங்குபவையாகும்.

இந்தியச் சமூகத்தில் பொற்கொல்லர்களின் கலைநுட்பத்தையும் தாண்டி அவர்கள் செய்திடும் தாலி உயர்வான ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்திய சமூகத்தைப் பொறுத்தமட்டில் தாலி ஒரு புனிதப் பொருள். திருமணத்தில் முக்கிய சடங்காக விளங்குவது தாலி ஆகும். அவ்வாறான புனிதத் தன்மை கொண்ட தாலியை திருமணம் நடைபெறும் இடத்திலேயே செய்துள்ளனர். மூன்றுநாள் திருமணத்தில் மூன்றாம் நாள் தாலி உருக்கி திருமணம் செய்யும் வழக்கம் இருந்துள்ளது. திருமணம் நடைபெறும் இடத்தின் அருகே ஒரு சிறிய மேடை அமைத்து தாலியை செய்யும் வழக்கம் காணப்பட்டதை காலகண்டம் நாவல் பதிவு செய்கிறது. இதற்காக பொற்கொல்லர்களை திருமணம் நிகழ்த்துவோர் முறைப்படி அழைப்பு விடுப்பர். அழைப்பினை ஏற்று தாலி செய்ய வரும் பொற்கொல்லர் தாலி செய்யும் முன்னும் தாலி செய்த பின்னும் அந்த நாள் முழுவதும் ஊண் உண்பதில்லை. இவ்வாறாக திருமணத்தில் தாலி உருக்குதல் என்னும் நிகழ்வு பண்பாட்டு ரீதியான நிகழ்வாக விளங்குகிறது.

காலகண்டம் புதினத்தில் வெள்ளையப்பன், சின்னஆவுலு ஆகியோரின் திருமணம் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. அந்நிகழ்வில் தங்கம் உருக்கித் தாலி செய்யும் நிகழ்வு மூன்றாம் நாள் நடைபெறுவதாக எழுத்தாளர் எஸ்.செந்தில்குமார் சுட்டுகிறார். “மூன்று நாள் கல்யாணத்தில் மூன்றாவது நாள் திருமாங்கல்யம் உருக்கிவிடுதல். காலையில் ஏர்போழுதில் அமிர்தயோகத்தில் காமட்சியம்மனையும், குலதெய்வத்தையும் நினைத்துக்கொண்டு புல்லாங்குழல் மூக்கையா, உமியோட்டைத் தட்டிகொட்டி ஊதினார்”[5] (காலகண்டம், செந்தில்குமார்.எஸ், பக்க எண் 179) என்று திருமணத்தில் மூன்றாம் நாள் தாலி செய்வதையும், “திருப்பூட்டு நடக்கும் மேடையில் வலது ஓரத்தில் கண்ணி மூலையில் அமர்ந்திருந்த மூக்கையா தனது குலசாமியை வேண்டிக்கொண்டு பெண் வீட்டார்கள் கையிலிருந்த அபரஞ்சியை வாங்கிக்கொண்டார். அமிர்தயோகம் முடிவதற்குள்ளாக பொட்டை உருக்கிவிட வேண்டுமென்று சன்னாசி தவிதாயப்பட்டார்”[6] (காலகண்டம், செந்தில்குமார்.எஸ், பக்க எண் 179) என்று தாலி திருமண நிகழ்விடத்திலேயே செய்யப்படும் என்ற கருத்தினையும் காலகண்டம் புதினம் பதிவு செய்கிறது. மேலும் நாவலில் செட்டியார் வீட்டில் நடைபெறும் திருமணத்திற்கு நம்பி ஆசாரியை தாலி செய்ய முறைப்படி

அழைத்ததையும் நாவல் குறிப்பிடுகிறது. "சௌடையன் செட்டியார் வீட்டில் கல்யாணத்திற்கு பத்திரிகை தந்துவிட்டு கையோடு தாலி உருக்கி விடுவதற்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தார்கள். தேவாங்கு செட்டியார் வீட்டில் நடக்கும் கல்யாணத்திற்கு முழுக்க நம்பி ஆசாரிதான் தாலி உருக்கி விடுவது"[7] (காலகண்டம், செந்தில்குமார்.எஸ், பக்க எண் 273) இவ்வாறு நாவல் தாலி செய்ய நம்பி ஆசாரியை அழைத்தமையை சுட்டுகிறது.

மற்றொரு திருமண நிகழ்வில் செட்டியார் வீட்டுத் திருமணத்திற்குத் தாலி செய்யத் திருமண நிகழ்விடத்திற்குச் செல்லும் நம்பி ஆசாரி தாலி செய்து தந்துவிட்டுத் தனது பட்டறைக்கு வருகிறார். அங்கு தனது நண்பர் ரஹீம் நம்பியிடம் "ஏண்டா ஞாயிற்றுக்கிழமை இன்னைக்கு கறி எடுத்தியா என்று ரஹீம் கேட்டார். நம்பி ஆசாரி, இல்லையப்பா, இன்னைக்கு பொன்னுருக்கப் போயிருந்தேன் தாலி உருக்கிட்டா அன்னைக்கு கறி சாப்பிடக்கூடாதில்லை என்றார்."[8] (காலகண்டம், செந்தில்குமார்.எஸ், பக்க எண் 275) இவ்வாறு தாலியை திருமண நாளன்று திருமண நிகழ்விடத்திலேயே செய்யும் வழக்கம் இருந்ததையும், தாலி செய்த நாளில் இறைச்சி உண்ணாத வழக்கம் இருந்ததையும் இதனை பொற்கொல்லர்கள் தங்கள் தொழில் சார்ந்து கடைப்பிடித்து வந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது. தாலி என்பது பொருள் சார் பண்பாடாக சமூகத்தில் விளங்கியதும் அறியமுடிகின்றது.

## தொழில் சார் பண்பாட்டு மாற்றம்

காலம் மற்றும் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பத் தொழிலில் பல மாற்றங்கள் நிகழ்வது இயல்பு. பொற்கொல்லரின் பொன்தொழிலும் காலச்சூழலுக்கு ஏற்பச் சில மாற்றங்களை அடைந்தே வந்துள்ளது. பொற்கொல்லரின் தொழில் முறைமாற்றம் சமூகத்தின் பண்பாட்டு நிகழ்வுகளிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருமண நிகழ்விடத்தில் பொன் உருக்கித் தாலி செய்யும் வழக்கம் காலப்போக்கில் மாறி பட்டறையில் செய்தோ, நகைக்கடைகளில் தாலியை வாங்கியோ திருமண நிகழ்வைச் செய்யத் துவங்கினர். போனூரில் இருந்த செட்டியார் தன் நகைக்கடைக்கு விற்பனைக்காகத் தாலியைச் செய்து தரும்படி நம்பி ஆசாரியிடம் பொன் தருவார். நம்பி ஆசாரி தாலி செய்து தருவார் " ராத்திரி எட்டு மணிக்கு மேலிருக்கும் நகைகடையிளிருந்து கணக்குப்பிள்ளை சிங்காரம் வந்து செட்டியார் தாலி உருப்படி சிறுத்து தெரிகிறதாக கிராக்கி கோவிக்கிறார்கள் என்று நம்பி ஆசாரியைத் திட்டினார். என்ன செய்வதென்று தெரியவில்லை. கணக்குப்பிள்ளை பேசபேச அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு கணக்குப்பிள்ளை பழைய தாலியைத் தந்து

திராவகம் போடச்சொன்னார்."[9] (காலகண்டம், செந்தில்குமார்.எஸ், பக்க எண் 276) என்று கடைக்கு தாலி செய்து தரும் வழக்கினை காலகண்டம் நாவல் பதிவு செய்கிறது.

## மொழியும் பண்பாடும்

ஓர் இனத்தின் சமூகத்தின் தனித்த அடையாளமாக விளங்குவது மொழி. பிற உயிரினங்களிடமிருந்து மனித சமூகத்தை வேறுபடுத்தி தனித்துவமாக காட்டிடும் அடிப்படைக் கூறுகள் பல இருப்பினும் மொழி என்ற கருவியே மனிதனுக்கும் விலங்குக்கும் இடையேயான வேறுபாட்டை மேலோங்கச் செய்கிறது. மனிதன் மொழியினை அறிந்த பின்னரே நாகரிகம் வாய்ந்த சமூக வாழ்வியல் என்ற கட்டமைப்பிற்குள் வந்தான். அந்த கட்டமைப்பிற்குக் காரணமாகவும் இணைப்பாகவும் மொழியே விளங்கியது.

மனித இனம் பல்வேறு இனக்குழுக்களாகப் பிரிந்து வாழத் தளைப்பட்டபொழுது அவர்களின் அடையாளமாக விளங்கியதும் மொழி ஆகும். ஒரு இனத்தின் பழக்கவழக்கம், பண்பாடும, நாகரிகம் போன்று மொழியும் தனித்தன்மை வாய்ந்ததாகும். மொழி சார்ந்து பண்பாடும் பண்பாடு சார்ந்து மொழியும் ஒன்றோடு ஒன்று இணைந்தே காலந்தோறும் சமூகத்தில் பயணப்பட்டு வருகின்றன.

## பொற்கொல்லரின் தொழில் மொழி

தமிழ் நிலத்தில் பொன் தொழில் புரியும் பொற்கொல்லர்கள் சமூக வெளியிலும் தங்களது வீட்டிலும் தமிழையே பேசினாலும் தங்களின் தொழில் சார்ந்து வரும் பொழுது அவர்கள் தெலுங்கு மொழியினையே பேசுகின்றனர்.

ஆந்திரப் பகுதியில் இருந்து பொன் தொழில் செய்யும் மக்கள் தமிழகத்தினுள் வந்தனர் அவர்கள் இங்கு குடியேறி அவர்களின் தொழிலையே மேற்கொண்டனர் அதன் காரணமாகவே அவர்கள் தெலுங்கு மொழியினைக் காலம்காலமாகப் பேசுகின்றனர் என்ற கருத்துநிலை பொதுவாக மக்களிடையே நிலவி வருகிறது. ஆனால் அக்கூற்று மெய்யானதாக இருக்கும் என்பது பெரும் ஐயப்பாடே ஆகும்.

பொற்கொல்லர் பேசிடும் தெலுங்கு மொழியம் ஆந்திராவில் பேசப்படும் தெலுங்கும், ஆந்திராவில் இருந்து வந்து குடியேறிய தெலுங்கர்கள் பேசும் மொழியும் பெரிய அளவிலான வேறுபாட்டைக் கொண்டு உள்ளது.

மேலும் தெலுங்கு மொழி பேசும் பொற்கொல்லர் சமூகத்தினரின் பழக்கவழக்கம், பண்பாடு, உணவுமுறை, வழிபாடு,திருமணமுறை என அனைத்தும் தமிழ் நிலத்தின் பண்பாட்டு கூறுகளாகவே இருக்கின்றன.

காலகண்டம் புதினத்தில் பொற்கொல்லரின் தொழில் சார் பண்பாடு இனவரைவியல் கோட்பாட்டின் அடிப்படையில்

பொன் தொழில் செய்யும் பொற்கொல்லர்கள் தமிழகம் முழுவதும் தெலுங்கு மொழியைப் பேசுவதும் பிரத் தொழில் செய்யும் ஆசாரிகள் பொன் தொழில் செய்ய நேரிடும் பொழுது அவர்களும் தெலுங்கு மொழியினையே பேசுவதுமான சூழல், பொற்கொல்லர்கள் தொழில் சார்ந்த மொழியாகவே தெலுங்கு மொழியினைப் பயன்படுத்தினர் என எண்ணச் செய்கின்றது.

## தொழில் சார் மொழிப் பண்பாடு

பொற்கொல்லர்கள் தங்களுக்குள் சாதாரணமாகப் பேசிக்கொள்ளும் பொழுது தமிழையும் தெலுங்கையும் இணைத்து பேசுகின்றனர். உரையாடல் தமிழிலும் ஒரு சில சொற்கள் தெலுங்கிலும் அமைகின்றன. ஆனால் தொழில் சார்ந்து கருத்துக்களைப் பேசிடும் பொழுது மட்டும் உரையாடல் தெலுங்காகவே உள்ளது.

காலகண்டம் புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகைத் தொழில் புரியும் பொற்கொல்லர்கள் தங்களின் தராசுப் படிக்கல்லிற்கு அரசு முத்திரை இடுவதற்கு அரசு அலுவலகத்திற்குச் செல்கின்றினர். அங்கு முத்திரையிடும் பொழுது "பொன்னுவிடம் நம்பி எத்தானும் பட்டுநூல் நைனா பட்டுநூல் என்று சொன்னார். அதைக்கேட்டுக் கொண்டிருந்த ஆபிசர் ஏய், எது பேசினாலும் தமிழிலே பேசுங்க"[10] (காலகண்டம், செந்தில்குமார்.எஸ், பக்க எண் 354) என்று குறிப்பிடுகிறார். தங்களது தொழில் புரியும் இடத்தில் மட்டும் அல்லாது தொழில் சார்ந்து எவ்விடத்தில் பேசினாலும் தெலுங்கு மொழியினையே பயன்படுத்துகின்றனர் என்பதை மேற்கண்ட நிகழ்வின் மூலம் நாவல் காட்சிப் படுத்துகின்றது.

## ஆய்வு முடிவுரை

பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் ஆணிவேர். காரணம் பண்பாடு என்பதே பண்பட்டு பண்பட்டு உருவான மேன்மையான ஒன்றாகும். பண்பட்ட ஒரு இனத்தின் சிறப்பு வெளிப்பாடே பண்பாடு. அந்த வகையில் தமிழ் சமூகம் தன்னகத்தே மிகசிறந்த பண்பாட்டைக் கொண்டுள்ளது. தமிழ் சமூகமானது பல சாத்திய சமூகமாக விளங்குகிறது. அவ்வாறு விளங்கும் சாதிய சமூகங்களுக்கு என்று தனிப்பட்ட பண்பாட்டு கூறுகளும் இருக்கத்தான் செய்கின்றன. அந்த வகையில் பொற்கொல்லரின் தனித்த பண்பாட்டு கூறுகளாக மொழி, தொழில், வாழ்வியல் முதலியன விழங்குகின்றன.

## ஆய்வு முடிவுகள்

காலகண்டம் நாவலானது ஓர் இனத்தின் வாழ்வியலை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டதால் வரலாற்று நிகழ்வுகளுக்கும் பெருன்பான்மை இடம் தந்து உள்ளது. ஆனால் அவை நாவலில் கால வழுக்களாக அமைந்துள்ளன.

அந்த வரலாற்று செய்திகளில் பொற்கொல்லர் குறித்த தகவல்கள் குறிப்பிட்டு சொல்லும் அளவிற்கு கிடைக்கவில்லை.

இவ்வாறான சிக்கல்கள் மற்றும் தொழில் பற்றிய தகவல்கள் வாழ்வியலோடு ஒன்றி அமைந்து வருவதும் பொற்கொல்லரின் தொழில் சார்ந்த தகவல்களை மிகுதியாக தருவதில் சிக்கல் உள்ளது.

பொற்கொல்லர் தொழில் சார்ந்த பண்பாடு குறித்தும், மொழி குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ள நாவல் அடித்தளம் இடுகிறது.

# குறிப்புகள்


1. ஸ்டீபன்.ஞா, இலக்கிய இனவரைவியல், பக்கம் 5, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., முதல் பதிப்பு, 2017
2. ஸ்டீபன்.ஞா, இலக்கிய இனவரைவியல், பக்கம் 23, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., முதல் பதிப்பு, 2017
3. ஸ்டீபன்.ஞா, இலக்கிய இனவரைவியல், பக்கம் 13, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., முதல் பதிப்பு, 2017
4. சிவசுபிரமனியன்.ஆ, இனவரைவியலும் தமிழ் நாவல்களும், பக்கம் 4, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்., முதல் பதிப்பு, 2014
5. செந்தில்குமார்.எஸ், காலகண்டம், பக்கம் 179, உயிர்மை பதிப்பகம், முதல் பதிப்பு, 2013
6. செந்தில்குமார்.எஸ், காலகண்டம், பக்கம் 179, உயிர்மை பதிப்பகம்,முதல் பதிப்பு, 2013
7. செந்தில்குமார்.எஸ், காலகண்டம், பக்கம் 273, உயிர்மை பதிப்பகம், முதல் பதிப்பு, 2013
8. செந்தில்குமார்.எஸ், காலகண்டம், பக்கம் 275, உயிர்மை பதிப்பகம், முதல் பதிப்பு, 2013
9. செந்தில்குமார்.எஸ், காலகண்டம், பக்கம் 276, உயிர்மை பதிப்பகம், முதல் பதிப்பு, 2013
10. செந்தில்குமார்.எஸ், காலகண்டம், பக்கம் 354, உயிர்மை பதிப்பகம், முதல் பதிப்பு, 2013